பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 03 செவ்வாய்க்கிழமை 17.01.2023 கதிர் 70

**இது ரகசியம் அல்ல!**

அன்பு வாசகர்களே!

– இது பிரியாவிடை நேரம்.

–கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேல், தினசரி காலையிலும், அத்தோடு கடந்த சுமார் மூன்று ஆண்டுகளாக மேலதிகமாக மாலையிலும் கூட, என் எழுத்துக்கள் மூலம் உங்களோடு

2

# 13'ஐ முழுமையாக அமுல்படுத்தினால் நாடு பிளவுபடுமாம்!

## விமல் வீரவன்ஸவின் கண்டுபிடிப்பு ஜனாதிபதி,பிரதமருக்கு அவர் மடல்



கொழும்பு,ஜனவரி 17

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினால் நாடு குறுகிய காலத்திற்குள் பிளவுபடும் என விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கின்றார்.

2

## மீண்டும் மக்கள் புரட்சி நாட்டில் வெடிக்குமாம்!

### சரத் பொன்சேகா எச்சரிக்கை



மக்கள் ஆணையைப் பெற்று இந்த அரசாங்கத்தை கவிழ்ப்போம் என்றும் அதற்காக சகல பிரிவினரையும் ஒன்று

8

## ரணிலுடன் காணி விடுவிப்புத் தொடர்பில் நடத்திய பேச்சுகளில் நம்பிக்கை இல்லை

### வெளிப்படையாகக் கூறுகின்றார் சுமந்திரன்

யாழ்ப்பாணம்,ஜன.17

காணி விடுவிப்புத் தொடர்பில் ஜனாதிபதியின் கலந்துரையாடலில் எமக்கு நம்பிக்கையில்லை. இது தொடர்சியாக வெளிப்படுத்தப்படும் – வழமையான – கருத்தாகவே உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான கட்டுபணத்தை நேற்று யாழ் செயலகத்தில் செலுத்திய பின்னர் ஊடவியலாளர்களின் கேள்விக்கு பதலளிக்கையிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எந்தக் காலப்பகுதிக்குள் எங்கே, எந்த இடங்களில் உள்ள காணிகள் விடுவிக்கப்படும் என கூறவில்லை. மாறாக 108 ஏக்கர் காணி உடனடியாக விடுவிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

8



## 20 லட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோ அரிசி

### 2 மாதங்களுக்கு வழங்க முடிவு

சமுர்த்தி பயனாளர்கள் உட்பட குறைந்த வருமானம் பெறும் 20 லட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோ அரிசியை 02 மாத காலத்திற்கு

8

## சட்ட வைத்திய அதிகாரி திடீரென மாயமாகினார்!

### களுத்துறையில் சம்பவம்

களுத்துறை போதனா வைத்தியசாலையின் உதவி சட்ட வைத்திய அதிகாரி எல்.சி.ஜெயசிங்க காணாமல் போயுள்ளார் என களுத்துறை தெற்கு

## யாழ். அரசாங்க அதிபராக சிவபாலசுந்தரன் நியமனம்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களை நியமனம் செய்வதற்கு நேற்றைய அமைச்சரவை

8

## கூட்டமைப்பு உடைவு குறித்து கவலைப்படுகின்றர் அங்கஜன்



தமிழ் தேசிய தலைவரினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கட்சி அதன் உறுப்பினர்களின் செயற்பாட்டால் நேற்றுடன் இல்லாமல் போயுள்ளதாக சிறிலங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன்

8

## மசாஜ் நடவடிக்கைகளுக்கு இப்படி புதிய கட்டுப்பாடுகள்

ஆண்களுக்கு ஆண்களும், பெண்களுக்கு பெண்களும் மட்டுமே மசாஜ் கடமைகளில் ஈடுபட முடியும் என்ற புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக

8

## மக்களாணை இல்லாத ரணிலுக்கு சர்வதேச ஒத்துழைப்புக் கிட்டாது!

### அடித்துக் கூறுகின்றார் பேராசிரியர் பீரிஸ்



மக்களாணை இல்லாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்திற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேசம் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக நாட்டு மக்களின் அரசியல் நிலைப்பாட்டை சர்வதேசம் அறிந்து கொள்ளும் என

8

## மாவிட்டபுரம் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு



யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை மாவிட்டபுரம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் சம்பவ இடத்திலேயே

8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருங்கி உறவாடி – ஊடாடி – வந்த நான், அந்த ஊடாட்டத்திலிருந்து விலகும் நாள் இப்போது வந்திருக்கின்றது.

–'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பார்கள். நான் மாறும், என் பாதை மாறும், நாளும் வந்திருக்கின்றது.

– 'காலைக்கதிர்' ஒளி வீசத் தொடங்கிய நாள் முதல், தினசரி தவறாது என் எழுத்துக்கள் மூலம் உங்களுடன் ஊடாடும் அரிய வாய்ப்புப் பெற்றேன். 'காலைக்கதிர்' ஆசிரியர் பதவியில் இருந்து நான் பிரியாவிடை பெறும் நாள் இப்போது வந்துள்ளது. இன்றுதான் நான் 'காலைக்கதிர்' நாளிதழின் ஆசிரியனாகப் பணியாற்றும் கடைசி நாள். என் எழுதுகோல் சாம்ராஜ்யத்துக்கு ஓய்வு கொடுக்கும் கடைசி நாளும் கூட இது என்று எண்ணுகிறேன்.

– இன்று மாலை இதழும், நாளை காலை இதழும், வழமை போல என் வழிப்படுத்தலில் வெளிவரும்.

– நான் ஏற்க எண்ணியிருக்கும் புதிய மார்க்கத்தில் பயணித்தவாறு பத்திரிகை ஆசிரியர் பணியாற்றுவது ஊடக தர்மமன்று. அதனால் நானும் சேர்ந்து வளர்த்த 'காலைக்கதிர்' என்ற பெரு விருட்சத்திலிருந்து மிகுந்த மன வெதும்பலோடு விலகுகின்றேன்.

– 'ஆசிரியன் – வாசகன்' என்ற நம் உறவு இனி, 'வாசக சகோதரர்கள்' என்றாகுகின்றது.

– குறுகிய இரண்டு நாள் முன்னறிவித்தலுடன், இந்தப் பெரும் பொறுப்பை விட்டு நான் விலகுவதற்குத் தாராள மனதுடன் இசைவு தந்து, என்னை வாழ்த்தி நிற்கும் எங்கள் நிர்வாக இயக்குநர் சிவராஜா அனுராஜுக்கும், பொதுமுகாமையாளர் சிவராஜா யதுராஜுக்கும் என் பணிவான, அன்புரிமை கலந்த நன்றிகள்.

– எங்கள் நிர்வாக இயக்குநர் தாமே ஒரு தேர்ந்த – தகைமையுள்ள பத்திரிகையாளர் என்பதை நம் கண் முன் நிரூபித்தவர். ஆகவே இப்போதையதை விட தகைமைமிக்க, தேர்ந்த ஆசிரிய பீடக்கட்டமைப்பு ஒன்றை அவர் ஒழுங்குப்படுத்தி, இப்பணியைத் தொடர்வார் என்று நாங்களும் நீங்களும் முழுமையாக நம்பலாம். அதில் சந்தேகம் வேண்டாம். 'காலைக்கதிர்' தன்னுடைய ஊடக தர்மத்தை தவறாது கடைப்பிடித்து, ஏனைய நாளிதழ்களுக்கு முன்மாதிரியாகத் தொடர்ந்திகழும்.

– ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட 'காலைக்கதிர்' நாளிதழின் வரலாற்றுப் பணியில் என்னுடன் சேர்ந்து உழைத்த ஒவ்வொரு சகோதரப் பணியாளரையும் நன்றியுடனும் வாஞ்சையுடனும் நினைவு கூர்கின்றேன். அவர்கள் ஒவ்வொருவரும் 'காலைக்கதிர்' என்ற பெருவிருட்சத்தின் – வரலாற்றின் – அத்திபாரங்கள். இணைய வழியில் தமிழ் கூறும் நல்லுலகை ஆகர்ஷிக்கலாம் என்பதை 'காலைக்கதிர்' நிரூபித்து நிற்பதற்குக் காரணமாக அமைந்த அவர்கள் ஒவ்வொருவரையும் நன்றியுடன் எண்ணிப் பார்க்கிறேன்.

– கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாக தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல, இலங்கையின் பிற இடங்களிலும், புலம்பெயர் தேசங்கள் எங்கும் அதிகம் வாசிக்கப்படும் பத்தியாக இந்த 'இனி இது இரகசியம் அல்ல' என்ற மின்னலின் எழுத்து அமைந்தது. அதனால் பலரின் கடுப்புக்கும், சீற்றத்துக்கும், விசனத்துக்கும், ஏச்சுக்கும், பேச்சுக்கும், மிரட்டலுக்கும் கூட நான் ஆளானேன். அவர்கள் அனைவரும் ஓர் ஊடகப் போராளியின் பங்கு பணியாக அவற்றைக் கணித்து, மறந்து, என்னுடன் சமரசம் செய்து கொள்வார்களாக!

– 'காலைக்கதிர்' நானும் சேர்ந்து நட்ட விதை. அதை பெரு விருட்சமாக எதிர்காலத்தில் பார்க்க விரும்பிக் காத்திருக்கிறேன்.

– நமது நிர்வாக இயக்குநர் அனுராஜும், நமது சகோதரப் பணியாளர்களும் அதனை நனவாக்குவார்கள் என்று நம்புகின்றேன். அவர்களின் முயற்சிக்கு என் மானசீகமான ஆதரவு தொடரும்.

– எங்கள் பிரதம ஆசிரியரும், ஸ்தாபக ஆசிரியருமான அமரர் ம.வ.கானமயில நாதன் அவர்களின் ஆசியும் என்றும் 'காலைக்கதிருக்கு' வழிகாட்டும் என்று நம்புகிறேன்.

– ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்த எழுதுகோல் பணியில், ஒரு நாள் கூட வேளை தவறாமல் நாளிதழைக் கொண்டு வர முடிந்தது என்றால் – காலையிலும் மாலையிலுமான ஆசிரியர் தலையங்கங்கள் உட்பட எதையும் தவறவிடாமல் என்னால் எழுத முடிந்தது என்றால் – அது இறையருளின் ஆசீர்வாதம்தான்.

– விடைபெறும் கடைசி நாளில் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

**உங்கள் ஊடக நண்பன்,**
**ந.வித்தியாதரன்.**

## '13'ஐ முழுமையாக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

13 ஆவது திருத்தத்தை முழுமைப் படுத்தினால் பிரிவினைவாத கொள்கையுடைய அரசியல் தலைவர்களின் நோக்கம் நிறைவேறுமே தவிர, தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள உண்மை பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண 1957 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக ஏழ்மை ஒழிப்பு சட்டத்தை முழுமையாக செயற்படுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் விமலல் வீரவன்ஸ ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரச பொங்கல் பண்டிகை நிகழ்வில் கலந்துக்கொண்டு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவார் எனக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மகாநாயக்க தேரர்களுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக வடக்கு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றினால் குறுகிய காலத்தில் நாடு இரண்டாக பிளவடையும்.

13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதால் வடக்கின் பிரிவினைவாத, சாதி அடிப்படையிலான அரசியல் தலைவர்களின் நோக்கம் நிறைவேறுமே தவிர, தமிழ் மக்களின் உண்மைப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் பிரிவினைவாத அரசியல் கட்சிகள் அடையாளப்படுத்தும் இன அடிப்படையிலான பிரச்சினை, நாங்கள் அடையாளப்படுத்தும் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் மனங்களை வெல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது உண்மை.

தமிழ் மக்களின் அடிப்படையில் சர்வக்கட்சி தலைவர் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இந்த கூட்டத்தில் பிரிவினைவாத அரசியல் கட்சிகளின் நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

சர்வதேச காலநிலை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் 2002 ஆம் ஆண்டு முன்வைத்த கொள்கையில் போர் நிறுத்த ஒப்பந்தம், வடகிழக்கு மாகாண சபையை தற்காலிக அரசாங்கமாக மாற்றியமைக்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அப்போதைய பிரதமராக பதவி வகித்த நீங்கள் (ஜனாதிபதி) அதற்கு இணக்கம் தெரிவித்தீர்கள். அதற்கமைய 'ஒஸ்லோ ஒப்பந்தம்' கைச்சாத்திடப்பட்டது.

அதனை தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் மங்கல சமரவீர புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், சர்வதேச பிரிவினைவாத அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களை ஒன்றிணைத்து சிங்கப்பூர் நாட்டில் பேச்சுவார்த்தையில் ஈடுப்பட்டதுடன் ஒரு சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு செய்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேக நபர்களை விடுதலை செய்வதன் ஊடாக தமிழ் மக்களின் நன்மதிப்பை பெற்றுக்கொள்ளல், இராணுவ முகாம் மற்றும் அதனை அண்மித்த காணிகளை விடுவித்தல், மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான 'எல்' வலய காணிகளை பிரதேச செயலகம் ஊடாக விடுவித்தல், காணி கொள்கையில் எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு மாத்திரம் காணிகளை வழங்கும் திட்டத்தை வகுத்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்க விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. காணாமல் போனார் அலுவலகம் சட்டத்தின் ஊடாக இயற்றப்பட்டுள்ளது. தென்னாப்பிரிக்காவில் உருவாக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் சர்வதேச தலையீடு தென்னாப்பிரிக்காவில் வெளிப்படையாக காணப்படுவதை அறிய முடிகிறது.

2002 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவேற்ற முடியாத விடயங்களை 2023 ஆம் ஆண்டு நிறைவேற்ற முயற்சிப்பது நாட்டின் அரசியல் மற்றும் நிர்வாக கட்டமைப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும். நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் மக்களை திசைதிருப்பி நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிக்கின்றீர்கள் என்பதை நன்கு அறிவோம். பிரிவினைவாதத்தில் இருந்து நாட்டை பாதுகாத்து, வடக்கு மக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் 10 பிரதான யோசனைகளை முன்வைக்கிறோம்.

இராச்சியத்தின் நிறைவேற்று அதிகாரத்தை உள்ளூராட்சி மன்றங்களுக்கு விரிவுப்படுத்தி அதற்கு இணையாக மக்கள் சபை என்பதொன்றை உருவாக்கி அரச செயற்பாடுகளில் மக்களை இணைத்துக் கொள்ள வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தை வினைத்திறனான முறையில் செயற்படுத்தும் வகையில் உள்ளூராட்சி மன்ற பிரதானிகளை உள்ளடக்கிய வகையில் உள்ளூராட்சி அபிவிருத்தி சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்குள் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துவதற்காக மத்திய அரசாங்கத்தின் பிரதி அமைச்சரின் அதிகாரத்துடன் குறைந்தளவிலான அமைச்சரவை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு விசேட சலுகைகள் ஏதும் வழங்க கூடாது.

நாட்டின் சகல இனங்களின் தேசியத்துவம் மதிக்கப்படுவதுடன், மதம் மற்றும் மொழி அடிப்படையில் வேறுபாடுகள் காண்பிக்க கூடாது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் குறிப்பாக தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் 1957 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக ஏழ்மை ஒழிப்பு சட்டத்தை முழுமையாக செயற்படுத்த வேண்டும். பிரிவினைவாதம் மற்றும் மதவாதத்தை அடிப்படையாக கொண்ட செயற்பாடுகளை தடுக்கும் வகையில் புதிய பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள்குடியமர்த்தல், ஏழ்மை ஒழிப்பு ஆகியவற்றுக்காக விசேட நிதியம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அத்துடன் பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்கள் முழுமையாக விடுதலை செய்ய

(08ஆம் பக்கம் பார்க்க)






காலைக்கதிர் Kalaikkathir

# சுமையின்றி வாழ்கின்ற சூழலை உருவாக்க அதிகாரத்தை எமக்கு வழங்கினால் தயார்

## சஜித் சூளுரை



வங்குரோத்து நிலையில் உள்ள நமது நாட்டில் 2 கோடியே 20 லட்சம் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு ஆட்சியாளர்களிடம் தீர்வைக் கேட்டு நின்றாலும் தற்போதைய அரசாங்கம் அந்தப் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வையும் வழங்கவில்லை.

அரசாங்கமும் போலவே சில கட்சி அரசியல் தரப்பினரும் தமது அரசியல் மேடைகளிலும், மாநாடுகளிலும், ஊடகவியலாளர் சந்திப்புகளிலும் பல்வேறு விமர்சனக் குரலை எழுப்பிக் கொண்டு இருந்தாலும் இறுதியில் அவை வெறும் பேச்சுக்களாகவே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

பிரயோக ரீதியாக நடைமுறைக்கு வந்த பாடில்லை. இந்நிலையில் நாட்டு மக்கள் அரசியல் அதிகாரத்தை வழங்கினால் சுமையின்றி வாழ்வதற்குத் தேவையான சூழலை உருவாக்க தாம் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய வரிசைப்படுத்தல் படையணியின் களுத்துறை மாவட்ட மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் –

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் பணம், வளங்கள் மற்றும் அந்நிய செலாவணி தேவைப்பட்ட போதிலும் தற்போதைய அரசாங்கத்தால் மக்களின் கோரிக்கைகளுக்குத் தேவையான பொருள்கள் விநியோகத்தைக் கூட வழங்க முடியவில்லை.

அவர்கள் இயலுமையற்றவர்கள் என்பதால் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தில் சேருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டபோதும் கொள்கையளவில் அதை தாம் நிராகரித்தோம்.

சுவாரசியமான, வேடிக்கையான, ஆர்வத்தைத் தூண்டும் பேச்சுக்களைக் கூறும் நபர்களை விட நடைமுறை ரீதியாக மக்களுக்கு சேவையாற்றுபவரே இவ்வேளையில் நாட்டுக்கு தேவை. கடந்த 2005 ஆம் ஆண்டு சுனாமி நிவாரண நிதியை திருடியவரை நாட்டின் ஆட்சியாளராக மாற்றுவதற்கு அவர்களும் ஒன்றே இவர்களும் ஒன்றே என்று கூறும் தரப்பே உதவியது.

அதை மக்கள் மறந்து விடவில்லை. அரச அதிகாரம் இல்லாவிட்டாலும் மக்களுக்குச் சேவையாற்றும் போது தம்மை கேலி செய்பவர்களை அதிகாரம் இல்லாவிட்டாலும் தன்னுடன் போட்டியாக மக்களுக்கு சேவை செய்ய முன் வாருங்கள் என்று அழைப்பு விடுக்கிறேன்.

மக்களின் பிரச்சினைகளை வார்த்தைகளை விட செயலால் யாரால் தீர்க்க முடியும் என்பதை மக்கள் தங்கள் அறிவாற்றலால் தீர்மானிக்க வேண்டும். நான் ஆங்கில மொழியைக் கையாளும் விதத்தை அவமதிக்காமல் மக்களுக்குச் சேவை செய்யுமாறு கோரிக்கை விடுக்கிறேன். தனக்கும் தனது குழுவிற்கும் அரசியல் அதிகாரத்தை மக்கள் வழங்கினால் உலகிற்கு சுமையின்றி வாழ்வதற்குத் தேவையான சூழலை உருவாக்கித் தருவோம்.

இந்த நேரத்தில் நம் நாட்டுக்குத் தேவைப்படுவது டொலர்கள், யூரோக்கள் மற்றும் பவுண்கள் ஆகும். அதற்கான நடைமுறை வேலைத்திட்டமொன்று தேவை. 74 வருட வரலாற்றில் இந்த நாட்டில் எந்த எதிர்க்கட்சியும் செய்யாத பணியை தற்போதைய எதிர்க்கட்சி செய்திருப்பதால் மக்கள் இது தொடர்பாகப் புத்திசாலித்தனமாக சிந்தித்து அடுத்த தேர்தலில் முடிவெடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையின் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வது ஒரு தேசிய முன்னுரிமையாக அமைய வேண்டும்!

## தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டு

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் உயர் நீதிமன்றம் கடந்தவாரம் வழங்கிய தீர்ப்பும் இலங்கையின் இரு முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் இரு இராணுவ அதிகாரிகள் மீது கனடா அரசாங்கம் விதித்திருக்கும் தடைகளும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வது ஒரு தேசிய முன்னுரிமையாக வரவேண்டும் என்பதை உணர்த்துவதாக தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியிருக்கிறது.

இது தொடர்பில் பேரவை விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு –

ஈஸ்டர் குண்டுவெடிப்புகள் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் மனித உரிமை மீறல்களுக்காக கனடிய அரசாங்கம் விதித்திருக்கும் தடைகளும் ஆட்சிமுறையில் பொறுப்புக்கூறலின் முக்கியத்துவத்தை தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் வெளிப்படுத்தியிருக்கின்றன.முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பாதுகாப்புத்துறையின் நான்கு உயர்மட்ட உறுப்பினர்களும் தங்களது பொறுப்புக்களை அலட்சியம் செய்ததன் விளைவாக 500 இற்கும் அதிகமான குடிமக்கள் உயிரிழக்கவும் காயமடையவும் நேர்ந்தமைக்கு குற்றப்பொறுப்புடையவர்கள் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

பொது வாழ்வில் தண்டனையின்மையும் பொறுப்புக்கூறல் இன்மையும் காணப்படுகின்ற சூழ்நிலையின் பின்புலத்தில் இந்த தீர்ப்பு ஒரு மைல் கல்லாகும்.

அரசில் உயர் பதவிகளைப் பெறுவதென்பது தேர்தல்களில் வெற்றிபெற்றவர்களால் அல்லது அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களுடன் நெருக்கமாக இருப்பவர்களால் ஒரு வரப்பிரசாதமாகவும் சிறப்புரிமையாகவும் நீண்டகாலமாக நோக்கப்பட்டுவருகிறது.இலங்கையில் உயர் பதவிகளை வகிப்பதென்பது தேசிய நலன்களுக்காக சேவை செய்வதை விடவும் சுய இலாபம் அடைவதற்கும் நெருக்கமானவர்களுக்கு உதவி செய்வதற்குமான ஒரு வாய்ப்பாகவே நோக்கப்பட்டு வந்திருக்கிறது.

குண்டுத்தாக்குதல் அச்சுறுத்தல் தொடர்பாகத் திரும்பத்திரும்ப எச்சரிக்கைகள் செய்யப்பட்டதற்கு மத்தியிலும் குடிமக்களைப் பாதுகாக்க தவறியமைக்காக உயர் நிறைவேற்று அதிகார மட்டங்களில் இருந்தவர்களில் சிலரை பொறுப்பாளிகளாக்கி தேசிய நீதித்துறையின் உயர்பீடம் தீர்ப்பளித்திருப்பதை தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது.

நாட்டையும் மக்களையும் பெரும் இடர்பாட்டுக்குள்ளாக்கியிருக்கும் பொருளாதார வீழ்ச்சி தொடர்பில் நீதிமன்றங்களின் முன்னால் வேற பல வழக்குகள் இருக்கின்றன.பொருளாதார வீழ்ச்சி அதிகப் பெரும்பான்மையான மக்களின் வாழ்வை அவலத்துக்குள்ளாக்கியிருப்பதுடன் மக்களின் நாற்பது சதவீதமானவர்களை வறுமைக் கோட்டிற்கு கீழ் தள்ளியிருக்கிறது.

ஈஸ்டர் குண்டுவெடிப்புக்களால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட நீதியை பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்படடிருக்கும் லட்சக்கணக்கான மக்களாலும் பெற்றுக்கொள்ளப்படும் என்று நாம் நம்புகிறோம். தவறான முகாமைத்துவம் மற்றும் மோசடி போன்ற பொருளாதாரக் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களும் பொறுப்புக்கூற வைக்கப்பட வேண்டும்.அவர்கள் தங்கள் குற்றச்செயல்களுக்காக விலையை செலுத்த வைக்கப்படவேண்டும்.

கடந்த காலப் பிரச்சினைகளுக்கான பொறுப்புக்கூறலை கையாளத் தவறியதன் விளைவாகவே மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களின் நடவடிக்கைகள் வடிவில் சர்வதேச தலையீடுகளுக்கு கதவு திறந்துவிடப்பட்டது. சர்வதேச மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள் என்று கூறி கனடா அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷவையும் கோட்டாபய ராஜபக்ஷவையும் மற்றும் இரு இராணுவ அதிகாரிகளையும் இலக்குவைத்து கடந்த வாரம் தடைகளை விதித்திருக்கிறது.

மனித உரிமை மீறல்களைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படுபவர்களை தேசிய நீதித்துறைச் செயன்முறைகளின் ஊடாக பொறுப்புக்கூறவைக்க இலங்கை தவறிவிட்டது என்ற அடிப்படையிலேயே கனடா அரசாங்கம் அதன் நடவடிக்கையை நியாயப்படுத்தியிருக்கிறது.

இலங்கையில் பொருளாதாரக் குற்றங்கள் மீது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முக்கிய கவனம் செலுத்தியிருக்கிறது.அரசியல் தலைவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் நாட்டின் சொத்துக்களைக் களவாடி உள்நாட்டில் அல்லது வெளிநாடுகளில் இரகசியமாக பதுக்கிவைத்திருப்பதே பொருளாதாரக் குற்றங்கள் எனப்படுகின்றன. இந்த சர்வதேச ஆபத்தை கையாளுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையிடம் களவாடப்பட்ட சொத்துக்கள் மீட்புத்திட்டம் ஒன்று இருக்கிறது.

களவாடப்பட்ட சொத்துக்கள் மீட்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் சட்டம் ஒன்றைக் கொண்டுவரவேண்டியது அவசியமாகும்.வெறுமையாக இருக்கும் நாட்டின் பணப்பேழையை நிரப்புவதற்கு முறைகேடாக சேர்க்கப்பட்ட பணம் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வது அவசியமானதாகும்.

கடந்த ஒரு வருடமாக ஏற்கெனவே கடுமையான அதிர்ச்சிகளுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கை மக்களுக்கு கடந்த வாரத்தைய மிகவும் முக்கியத்தவம் வாய்ந்த இரு நிகழ்வுகளும் ஓர் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். இலங்கையின் கட்டமைப்புக்களிலும் மக்களின் உணர்வுகளிலும் பொறுப்புக்கூறல் கோட்பாடு நிறுவனமயப்படக்கூடிய வாய்ப்பை இந்த இரு நிகழ்வுகளும் ஏற்படுத்தும் என்பதே அவற்றில் உள்ள வரவேற்கத்தக்க ஆரோக்கியமான அம்சமாகும்.

உயர் நீதிமன்றத்தால் வெளிக்காட்டப்பட்ட தேசிய பொறுப்புக்கூறல்நெறிமுறை சர்வதேசதலையீடுகளைத் தவிர்ப்பதற்கும் தேசிய செயன்முறைகளை முன்னெடுப்பதற்கும் உதவும்.அதிகாரப் பதவிகளைப் பெறுபவர்களும் தேசிய தலைமைத்துவமும் மக்களையும் அவர்களின் மனித உரிமைகளையும் அவமதிக்காமல் இனிமேல் பொறுப்புடன் செயற்படும் என்று தேசிய சமாதானப் பேரவை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசமைப்பை எதிர்க்கும் வீரவன்ஸ

**தேர்தல் என்றதும் மீண்டும் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டது பௌத்த, சிங்களப் பேரினவாதம்.**

**இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டே, தென்னிலங்கையில் அரசியல் அதிகாரத்தை குறுக்கு வழியில், இலகுவாக எட்டுவதற்கான மார்க்கமாக, பௌத்த, சிங்களப் பேரினவாதத்தைக் கிளப்பும் வழிப்போக்கை நாடுவது வழமையாக இருந்து வருகிறது.**

**பண்டாரநாயக்கா காலத்தில் இருந்து தொடரும் தென்னிலங்கையின் மாற்ற முடியாத பரவணிப் பண்பியல்பு இது.**

**பேரினவாதிகளின் கொடூர ஆட்சிப் போக்கில் நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் மூழ்கியமையை அடுத்து, அதற்கு எதிராகப் பெரும் மக்கள் போராட்டம் வெடித்தது.**

**அச்சமயத்தில் ஆட்சி அதிகாரத்தை வைத்திருந்த பௌத்த – சிங்கள பேரினவாத சக்திகள், தென்னிலங்கை மக்களின் எழுச்சிப் போராட்டத்திற்கு முன்னால், தங்களின் பேரினவாதக் கோஷம் தாக்குப் பிடிக்க முடியாது என்பதைக் கண்டு அதனை சற்று அடக்கி வாசித்தது.**

**இப்போது, அது மீண்டும் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி இருக்கிறது.**

**பேரினவாதக் கூச்சலை சற்று அடக்கி வாசித்த விமல் வீரவன்ஸ போன்றோர் இப்போது மீண்டும் தம் கைவரிசையைக் காட்டத் தலைப்பட்டுள்ளனர்.**

**சிறுபான்மையினரான தமிழர்களோடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன்பாடு கண்டு, தீர்வை எட்டி விடுவாரோ என்று அச்சப்படும் வீரவன்ஸ போன்றோர், அத்தகைய ஒத்திசைவுக்கு எதிராக மோசமான சொல்லாடல்களில் விமர்சனங்களை வெளியிடுகின்றனர்.**

**அதற்கு அவர் எடுத்த ஆயுதம்தான் விநோதமானது; விபரீதமானது.**

**நாட்டின் மீயுயர் சட்டம் அரசமைப்பு. அதற்கு விசுவாசமாக நடப்போம் என்று சத்தியப் பிரமாணம் செய்துதான் விமல் வீரவன்ஸ போன்ற பேரினவாத அரசியல்வாதிகளும் பதவி ஏற்றனர்.**

**அந்த அரசமைப்புச் சட்டத்துக்கான 13 ஆம் திருத்தத்தை ஒட்டுமொத்தமாக நிராகரித்து கூக்குரலிடுகின்றார் விமல் வீரவன்ஸ.**

**நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பின் ஏற்பாடுகளையே தூக்கிக் கடாசும் அளவுக்கு அவரின் பேரினவாத மேதாவிலாசம் சிறுமை அடைந்து போய் நிற்கின்றமை கண்கூடு.**

**இந்த இனவாதப் பேய் பௌத்த – சிங்களத்தின் மூளை மையம்வரை ஊடுருவி, அதைப் பற்றிப் பீடித்து நீடிக்கையில், இந்த நாட்டின் இனப் பிரச்சனைக்குத் தீர்வு என்பது சாத்தியப்படப் போவதில்லை என்பதுதான் நிஜம்.**

# சுற்றுலாப் பயணத்துக்கு ஏற்ற சிறந்த நாடுகளில் இலங்கைக்கு முதலிடம்!

கொழும்பு, ஜன. 17

2023 ஆம் ஆண்டில் உலகில் பயணம் செய்ய சிறந்த 24 நாடுகளில் இலங்கை முதலிடத்தை பிடித்துள்ளது.

சுற்றுலா இணையத்தளமான ட்ரவல் ட்ரை ஏங்குள் இணையத்தளத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் நாட்டின் இயற்கை வளங்களின் வனப்பு காரணமாக இலங்கை பயணத்துக்கு ஏற்ற முதல் நாடாக மாறியுள்ளது.

கடற்கரைகள் வனவிலங்குகளால் நிறைந்த வன கட்டமைப்புகள் ரம்மியம் நிறைந்த தேயிலைத் தோட்டங்கள் மற்றும் பனி மூடிய மலைத்தொடர்கள் என பல சுற்றுலா இடங்கள் தொடர்பான தகவல்களை வெளியிடும் இணையத்தளமாக ட்ரவல் ட்ரை ஏங்குள் டிரவல் ரைஏங்குள் இணையத்தளம் காணப்படுகின்றது.

இலங்கையின் செழிப்பு மற்றும் பௌதீக பன்முகத்தன்மையை கண்டு சுற்றுலாப் பயணிகள் வியப்படைகின்றமை தொடர்பாக இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் நான்காவது உயரமான மலையான சிவனொளிபாத மலையுச்சியில் இருந்து பார்க்கும் காட்சி ரம்மியமாக இருப்பதாகவும் ஒவ்வொருவரின் உடல் தகுதியைப் பொறுத்து 5 முதல் 6 மணித்தியாலங்களுக்குள் இந்த உலக பாரம்பரிய தளத்தில் ஏறலாம் எனவும் இந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

வாழ்வில் புத்துயிர் பெற வேண்டுமானால் இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் நிழலான இடத்தில் அமர்ந்து விட்டமின் டி யை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இலங்கை தொடர்பில் இந்த இணையத்தளம் தகவல்களைப் பதிவு செய்துள்ளது.

## வறட்சியின் காரணமாகப் பெருமளவான நெற்செய்கை பூநகரி பிரதேசத்தில் பாதிப்பு

கிளிநொச்சி பூநகரியில் நிலவும் வறட்சி காரணமாக பெருமளவான நெற்செய்கை அழிவடைந்துள்ளதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் பருவ மழையை நம்பிய வகையிலேயே பெரும் போகச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது வழமை. அதே போன்று 2022/2023 பெரும் போக செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாகக் கூடுதலான நெற்செய்கைகள் அழிவடைந்துள்ளன.

குறிப்பாக பூநகரி, வாடியடி, கறுக்காய் தீவு, ஞானிமடம், செல்விபுரம், கரியாலை, நாகபடுவான், கொல்லக்குறிச்சி, நல்லூர் போன்ற பகுதிகளில் கூடுதலான நெற்பயிர்கள் வறட்சி காரணமாக அழிவடைந்துள்ளன. இந்தப் பகுதிகளில் பெருந்தொகை நிதிகளை செலவுசெய்து காலபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள நிலையில் தற்போதைய வரட்சியால் நெற்பயிர்கள் அழிவடைந்து வருகின்றன.

வறட்சி காரணமாக இதுவரை 30 வீதத்துக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன எனவும் விவசாய அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. குறிப்பாக பெருந்தொகை நிதிகளை செலவிட்டு அதிகரித்த விலைகளில் எரிபொருள் தட்டுப்பாடு உரத்துக்கான தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் நெற்செய்கை மேற்கொண்டுள்ள போதும் இவ்வாறு வறட்சி காரணமாக அழிவடைந்துள்ளதால் விவசாயிகள் பெரிதும் பாவிக்கப்பட்டுள்ளனர்.

## 5 காவல் நாய்களுடன் கசிப்பு உற்பத்தி இரு மாடிக்கட்டடத்தில் ஒருவர் கைது!

கட்டுகஸ்தோட்டைப் பொலிஸ் பிரிவில் இருமாடிக்கட்டடத்தில் 5 காவல் நாய்களுடன் கசிப்பு உற்பத்தி செய்த இடம் ஒன்றைப் பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

கட்டுகஸ்தோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் படி மேற்படி சொகுசு மாடிக்கட்டடத்தை முற்றுகையிடச் சென்ற போது வாயிற் கதவு முன் உயர் ரக வளர்ப்பு நாய்கள் ஐந்து உட்பிரவேசிக்க முடியாது குரைத்து இடையூறு செய்துள்ளன.

இருப்பினும் சில பொலிஸார் வீட்டுப் பாதுகாப்பு மதிலின் மீதேறி மற்றொரு பகுதியின் ஊடாக வீட்டினுள் உட்பிரவேசித்து சோதனையிட்டுள்ளனர்.

அப்போது 36 போத்தல்களில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த கசிப்பு மற்றும் வடிசாராயத்தைக் கைப்பற்றியுள்ளனர். குறித்த கசிப்பு போத்தல்கள் அவ்வீட்டினுள் தயார்படுத்தப்பட்டவை எனப் பொலிஸாருக்கு தெரிய வந்துள்ளது. இதுதொடர்பாக சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ள அதேவளை கண்டி நீதிவான் முன் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## தலவாக்கலை லோகி தோட்ட மிடில்டன் பிரிவில் தீ; 7 வீடுகள் தீக்கிரை 12 குடும்பங்கள் நிர்க்கதி நிலை!





தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை லோகி தோட்டத்தின் மிடில்டன் பிரிவில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தால் 12 அறைகளைக்கொண்ட லயன் குடியிருப்பில் 7 வீடுகள் முழுமையாக தீக்கிரையாகியுள்ளன.

மேலும், 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இதனால் 12 குடும்பங்களை சேர்ந்த 49 இற்கும் மேற்பட்டோர் நிர்க்கதியாகியுள்ளனர்.

குறித்த லயன் குடியிருப்பில் ஞாயிறு இரவு திடீரென தீ விபத்த ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து மக்கள் கூச்சலிட்டுக் கொண்டு வெளியில் வந்தனர்.

அதற்குள் தீ வேகமாக பரவியது. பரவிய தீயை அதே தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பிரதேசவாசிகள், தலவாக்கலை பொலிஸாருடன் இணைந்து சுமார் மூன்று மணித்தியாலயங்களுக்கு பிறகு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து ஏற்பட்ட போது வீடுகளில் வசித்த பெருந்தொகையானோர் தோட்டத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்தமையால் தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த தீயால் தோட்டத் தொழிலாளர்களின் தனிப்பட்ட உடைமைகளும், வீடுகளில் வசித்த பிள்ளைகளின் பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

தீயால் பாதிக்கப்பட்ட 12 குடும்பங்களில் 3 குடும்பங்கள் மாத்திரம் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

மேலும், 9 குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டுள்ளன என தீ விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனி மற்றும் பிரதேசவாசிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் இதுவரை தெரியவில்லை எனத் தெரிவிக்கும் தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## வயாவிளான் மத்திய கல்லூரியின் 77 ஆவது நிறுவுனர்கள் தினம்!



யாழ்ப்பாணம் வயாவிளான் மத்திய கல்லூரியின் 77ஆவது நிறுவுநர்கள் தினம் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது.

பாடசாலையின் ஆ.சி. நடராசா அரங்கில் கல்லூரி முதல்வர் வே.த.ஜெயந்தனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் ஞானலிங்கம் ஆதவனும், கௌரவ விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனும் கலந்து கொண்டனர்.

அதன்போது வயாவிளான் கல்லூரியின் நிறுவுநர்களான ஈழகேசரி நா. பொன்னையா மற்றும் அமரர் சட்டத்தரணி வல்லிபுரம் இராசநயகத்தின் உருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் இராசநாயகம் பிரபந்தம் நூலின் மறுபதிப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் டெங்கு நோயாளர் எண்ணிக்கை!

இந்த வருடத்தின் முதல் இரண்டு வாரங்களில் 4 ஆயிரத்து 178 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், நோயாளர்களின் எண்ணிக்கை 871 எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் 846 நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 224 நோயாளர்களும், கண்டியில் 190 நோயாளர்களும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் 255 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஒருமித்த செயல்பாட்டால் பாதிக்கப்பட்டவர்கள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 241**

'ஒருமித்து செயல்பட்டமையால்' பாதிக்கப்பட்டவர்கள் என்பதன் விளக்கத்தை வாசகர்களது தெளிவுக்கும் புரிவிக்குமாக நான் அறிந்து கொண்ட சுலபமான உதாரணங்களால் தருகிறேன்.

நோயாளி ஒருவரைப் பராமரிக்கும் போது, கடமைகளில் ஈடுபட்டிருக்கும் மருத்துவரோ, தாதியரோ, அன்றில், வேறு எந்த பணியாளரோ, அந்த நோயாளியின் வருத்தங்களில் இருந்து நேரடியாகவோ, அன்றில், மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டால் அல்லது அப்படி இல்லாமல் அங்கு நடக்கும் எதிர்பாராத விளைவுகளால் இடைஞ்சல்களுக்கு ஆளானால், அப்படியான பணிக்குப் பாதிக்கப்பட்டவர் தானாக விரும்பியே வந்தவர் என்றும், அவர் அந்த விருப்பத்தில் ஒருமித்து செயல்பட்டமையால் பாதிப்பு ஏற்பட்டது எனவும், நஷ்ட ஈடு கோரிக்கைகளில் காப்புறுதிக் கம்பனிகள் தங்களது கட்சிக்காரர்களுக்காக எதிர்வாதம் செய்வது வழமை.

கொவிட் தொற்றினால் சேவைகளில் பாதிக்கப்பட்ட பணியாளர்களின் நிலைகளிலிருந்து இதனைப் பார்க்கலாம். இவ்வித வாதங்களை எதிர்கொள்வதற்காக இந்தப் பணியாளர்களின் சங்கங்கள் பெருமளவு ஆராய்வுகளும் பணச் செலவுகளும் செய்து, எவ்வித நிகழ்வுகளோ, பாதிப்புகளோ அவற்றுக்குள் அடங்குமென வரைமுறை செய்கிறார்கள்.

இவை போல, குடும்பச் சச்சரவுகளில் பாதிக்கப்படும் பெண்கள் (domestic violence), பாலியல் அத்துமீறல் வழக்குகளிலும் அந்தப் பெண் பாதிப்புக்கு உள்ளானமைக்கு அந்தப் பெண்ணும் ஒரு விதத்தில் ஒருமித்து செயல்பட்டமையால் என்ற வாதங்கள் எழுப்பப்படுவதுண்டு.

இதனைத்தான் சர்வதேசமும் ஐ.நாவின் கட்டமைப்புகளும் தங்களிடைய நடக்கும் ஆராய்வுகளிலும் விவாதங்களிலும் பாவிப்பதைத்தான் கலாநிதி குறிப்பிடுகிறார்.



அதாவது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த போர் பயங்கரவாதத்தை அழிப்பதற்கான போர், அது சட்ட ரீதியானது. அதில் அகப்பட்டவர்களில் பல பேர் தாங்களாகவே – அவர்களின் விருப்பத்திலேயே – அந்தப் பகுதிகளுக்குச் சென்றவர்கள். மிகுதிப் பேர் விடுதலை புலிகளால் கட்டாயப்படுத்தப்பட்டமையாலும், வெளியேறுவதற்குத் தரப்பட்ட முயற்சிகளை ஏற்றுக் கொள்ளாது தொடர்ந்து அந்தப் பகுதிகளிலேயே இருந்ததால் எதிர்பார்க்கப்படாத விளைவுகளில் அகப்பட்டவர்கள். இன்னும் ஒரு விதத்தில் அரசாங்கம் விடுதலை புலிகளை அழிக்க நடத்திய கடைசி நேர அகோரப் போரில் வேண்டுமென்று இல்லாமல் (unintented), ஆனால் கட்டுப்படுத்த முடியாத நடவடிக்கைகளால், எதிர்பார்க்க முடியாதவாறு பாதிக்கபட்டவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள். சட்ட ரீதியாகப் பயங்கரவாதத்தை அழிக்கும் போரில் சில எல்லை மீறி ய சம்பவங்கள் நடந்தன என்பதும் ஒரு வாதம். மனித உரிமைகள் சார்பில் இயங்கும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் இவை நடத்தப்பட்ட நோக்கங்களும், பின்னணிகளும், தாக்கங்களின் விளைவுகள் கையளிக்கப்பட்டவர்களுக்கு நடந்தவை என் பதை பற்றி மாற்று அபிப்பிராயங்களும் கருத்துக்களும் கொண்டுள்ளார்கள். ஆனால் நடந்ததை பற்றிய பொறுப்புக் கூறலுக்கு இது வரை சுதந்திரமான சர்வ தேச விசாரணை நடைபெறவில்லை. அப்படியானது ஒன்று அமைந்தால், ஐ.நாவின் கையில் இருக்கும் சாட்சியயங்கள், ஆவணங்கள் மூலம் நடந்தவை தெரியவரும் என்பது அரசு சார்பற்ற நிறுவனங்களின் கருத்து. இந்த 13 வருட காலங்களில் அது நடைபெறவில்லை. ஐநாவில் பார்க்கப்படும் – ஆராயப்படும் – உள்ளகப் பார்வைகள் தமிழ் மக்களுக்கான பச்சாதாபமான உணர்வுகள் வெளிப்படுவதில்லை என் பதை தான் தன்னுடைய 50 வருட அனுபவத்தில் கலாநிதி சாயாஸ் பகிர்கிறார்.

மேலும் தனது அனுபவங்களின் அங்கலாய்ப்புக்களை வெளிப்படுத்துவதில் அவர் பின்வருவனவற்றை ஆலோசனைகளாக தருகிறார்:–

∗ தமிழ் மக்களுடைய மனித உரிமை மீறலுக்கான மூலாதார பிரச்சனையை அவர்களுக்குரிய உள்ளக, வெளிப்புற சுயநிர்ணய உரிமைகள் இரண்டையுமே கொழும்பு அரசு மறுப்பதுதான். இது எரிச்சல் ஊட்டுகின்றது. ஏனெனில் சர்வதேச சட்டங்கள் இந்த உரிமைகளை மக்களுக்கு வழங்குகின்றன. இந்த சட்டங்கள் உறுதியானவையாக அமுல்படுத்தப்பட வேண்டியவை என – Hard law என – அவர் கருதினாலும் நடைமுறைகளில் அந்த உரிமைகள் தாமாகவே நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றோ அறுதியானவை எனவோ வரையப்படவில்ல (they are not selfish executing or absolute) தமிழ் மக்களுக்கு அந்த சுயநிர்ணய உரிமை உண்டு. ஆனால் இதுவரையும் நடந்த அரசியல் வட்டங்கள் இதற்கு சார்பாகவும் தமிழ் மக்களைப் போலவே பயவராவின் ஜக்போஸ், ஒகோனிஸ் இனத்தவர்களுக்கும், துருக்கி, சிரியா, ஈரான், ஈராக்கின் குர்தீஸ் மக்களுக்கும், ஸ்பெயினின் கடலான் இனத்தவருக்கும் பிரான்ஸின் கார்கேரியர்களுக்கும் கூட இந்த உரிமைகள் வழங்கப்படவில்லை. இந்த இன மக்கள் எல்லோருமே இடைநிலை பிரிவு என்ற கடப்பாட்டுக்கு உரித்தானவர்கள். அவர்களுக்கு எதிராக பயங்கர மனித உரிமை மீறல்கள் நடத்தப்பட்டாலும் ஐ.நாவோ சர்வதேச நாடுகளோ அவர்களுக்கு சாதகமாக ஒரு விரலைக் கூட அசைக்கவில்லை

∗ எஸ்டோனியா, லக்வியா, இஸ்வேனியா, செக்ஸியா சிலவாக்கியா, சுலோவீனியா, போஸ்னியா, மெர்சிடோனியா, மொன்றிநிகரோ போன்ற நாடுகள் சுயநிர்ணய உரிமைகளில் தோன்றியமைக்கு வல்லரசு சக்திகள் பிராந்திய ஒருமைப்பாடுகளை (territorial integrity) அவை சுயநிர்ணயஉரிமைகளுக்குஅருகதையானவர் தானா எனக் கணக்கெடுக்காது விட்டதுதான் அங்கு அடிப்படை நீதி இயங்கவில்லை. தங்களுடைய நலங்களுக்காக அந்த பிராந்தியங்களின் பகுதிகள் மறுசீரமைப்பு படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது.

தொடர்ந்து அவரது கருத்தை நோக்குவோம்.

(வளரும்...)





காலைக்கதிர் Kalaikkathir

## '13'ஐ முழுமையாக .......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். குறுகிய அரசியல் நோக்கத்திற்காக இராணுவத்தினர் மீது தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட வேண்டும். - என்று உள்ளது.

## மீண்டும் மக்கள் புரட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரட்டிக்கொண்டு இரண்டாவது போராட்டத்தை ஆரம்பிப்போம் என்றும் நடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நேற்று நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதிக்கு எந்த திட்டமும் இல்லை, விசித்திரக் கதைகள் கூறுகிறார். மக்கள் ஆணையால் இந்த அரசாங்கம் கவிழ்க்கப்படும்.

மக்கள் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். இன்னுமொரு மக்கள் புரட்சியை ஏற்படுத்துவோம். ஊழல் ஆட்சி விரட்டப்படும்.

யானை - மொட்டு கூட்டணியின் திருமணம் நாட்டுக்கு இறுதி சடங்காக மாறியுள்ளது. ஊழல் அரசியல்வாதிகளற்ற நாடொன்று கட்டி அமைக்கப்படும்.

இரண்டாவது போராட்டத்திற்கான பலமான அடித்தளமொன்று அமைக்கப்படும். சகல பிரிவினரையும் ஒன்று திரட்டி வீழ்த்த முடியாத போராட்டமொன்றை முன்னெடுப்போம். அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு சிறகும் வால் மற்றும் தான் குறைவு என்றார்.

## 20 லட்சம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக 40 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி தேவைப்பதோடு, அதற்கு அரசாங்கம் 61 ஆயிரத்து 600 மெற்றிக்தொன் நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களின் ஆதரவுடன் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## சட்ட வைத்திய அதிகாரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியரின் மனைவி அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வைத்தியர் பயணித்த வாகனம் பாலமொன்றுக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மருத்துவர் ஆற்றில் விழுந்தாரா இல்லையா என்பதை ஆய்வு செய்வதற்காக இரண்டு படகுகள் மூலம் களுகங்கையில் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## மசாஜ் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுர் வேத ஆணையாளர் நாயகம் தம்மிக்க அபேகுணவர் தன தெரிவித்துள்ளார்.

அதற்காக பல்வேறு வழிகளில் சட்டம் இயற்றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மசாஜ் நிலையங்கள் மூலம் எய்ட்ஸ் உள்ளிட்ட பாலியல் ரீதியான நோய்கள் பரவலாக பரவி வருவதாலேயே இந்தச் சட்டம் இயற்றப்படுவதாக ஆணையர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, ஆயுர்வேத திணைக்களத்தில் மசாஜ் நிலையங்கள் பதிவு செய்யப்பட வேண்டும், மற்றும் அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர் கட்டாயமாக இருக்க வேண்டும், மசாஜ் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர்கள் தொழில்சார் அறிவு மற்றும் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## மாவிட்டபுரம் விபத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் பட்டா வாகனமும் சைக்கிளும் மோதியே விபத்து ஏற்பட்டது.

மாவைகலட்டி பகுதியைச் சேர்ந்த 27 வயதான தா.தினேஷ் என்ற இளைஞரே உயிரிழந்ததார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பட்டா வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணிலுடன் காணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக விடுவிக்கப்படலாம் என நீண்டகாலமாகவே கூறிவருகிறார்கள். ஆனால் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இதன் காரணமாகவே யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் விடயங்கள் தொடர்பாக எங்களுக்கு நம்பிக்கை இல்லை. - என்றார்.

## யாழ். அரசாங்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புதல் வழங்கியுள்ளது

இலங்கை நிருவாக சேவையின் (விசேடதர) மூத்த அதிகாரியான அம்பலவாணர் சிவபாலசுந்தரன் மட்டக்களப்பு, கொழும்பு, வவுனியா போன்ற இடங்களில் பல்வேறு பதவிகளில் கடமையாற்றி, 2013 ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலக செயலாளராக, பிரதிப் பிரதம செயலாளராக, மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கடமையாற்றிய மையோடு மாகாண விவசாய அமைச்சின் செயலா ளராகவும் கடமையாற்றியிருந்தார்.

ஆளுமை மிக்க நிர்வாகி யாழ்ப்பண மாவட்டச் செயலகச் செயற்பாட்டில் அடுத்த வாரம் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கூட்டமைப்பு உடைவு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக கட்சி பிளவுபட்டு பிரிந்து போட்டியிடவுள்ளமை சுயலாப அரசியல் தந்திரமாகும்.

அவர்களால் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்கமுடியாது என அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மக்களாணை இல்லாத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை உரிய தினத்தில் நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. வேட்பு மனுத்தாக்கல் நாளை முதல் ஆரம்பமாகும்.

சுதந்திர மக்கள் கூட்டணி ஊடாக வலுவாக தேர்தலில் போட்டியிடுவோம். தேர்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

தேர்தலைப் பிற்போட அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்துள்ளது. வேட்பு மனுத்தாக்கல் செய்த தன் பின்னர் தேர்தலை பிற்போட அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. வேட்பு மனுத்தாக்கல் செய்ததன் பின்னர் தேர்தலை பிற்போட சட்டத்தில் வழிமுறை ஏதும் கிடையாது. ஆகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 02 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதை தவிர மாற்றுத் திட்டம் ஏதும் கிடையாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து வலியுறுத்துகிறார். மக்களாணை இல்லாத அரசாங்கத்துடன் எவ்வாறு தொடர்பு கொள்வது என சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பு அலுவலகத்தின் பிரதானி மூன்று முறை குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்திற்கு மக்களாணை கிடையாது. ஆகவே சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேசம் இந்த அரசாங்கத்திற்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது, ஏனெனில் சர்வதேசம் நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கும்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தீர்மானமிக்கது. தேர்தல் பெறுபேற்றை வைத்து மக்களின் அரசியல் தீர்மானம் எவ்வாறு உள்ளது என்பதை சர்வதேசம் விளங்கிக் கொள்ளும். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பெறுபேறு பொதுத் தேர்தலை நடத்தும் சூழலை ஏற்படுத்தும். - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799

காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கையின் கடனை கையாள்வது குறித்து கல்வியாளர்களின் அறிக்கை

இலங்கை, பல குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுடன் சேர்ந்து, வெளிப்புற மற்றும் உள் காரணிகளால் தொடர்ச்சியான நிதிசார் அதிர்ச்சிகளை சந்தித்துள்ளது. நாணயம் கணிசமாக மதிப்பிழந்தாலும், உணவு மற்றும் எரிசக்தி இறக்குமதி செலவுகள் உயரவும், வட்டி விகிதங்கள் உயரவும் உலகளாவிய சக்திகள் காரணமாக அமைந்துள்ளன.

தவறான கொள்கையைக் கொண்ட நிர்வாகத்தின் வரலாற்றுடன் இந்த அதிர்ச்சிகளும் (குறிப்பாக பொறுப்பற்ற கடன் பெறுதலை ஊக்குவித்த கட்டுப்பாடற்ற மற்றும் திறந்த தன்மை) சட்டவிரோத நிதி பாய்ச்சல்களை நாட்டுக்கு வெளியே செயற்படுத்தியதுடன் அரசியல் ஊழலுக்கு உதவியமை – வெளிப்புற கடன் மற்றும் சென்மதி நிலுவை நெருக்கடிகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.

கடந்த தசாப்தத்தில் உலகப் பொருளாதாரத்தில் பணப்புழக்க விரிவாக்கம் மற்றும் குறைந்த வட்டி வீதங்கள் நிலவிய வேளையில் தனியார் கடன் வழங்குநர்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு வழங்குவதை விட அதிக வட்டி வீதத்தில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு கடன்களை வழங்கினர்.

இத்தகைய நாடுகளில் கடன் திருப்பிச் செலுத்துவதை மிகவும் கடினமாக்கும் அதிக இக்கட்டான நிலையை உருவாக்கும் நோக்கத்தோடே இந்த அதிக வீதங்கள் நடைமுறையில் இருந்தன. முதலில் உலகளாவிய பெருந்தொற்று மூலமும் பின்னர் 2022 ஆம் ஆண்டின் விலை அதிர்ச்சிகள் மற்றும் வட்டி வீத அதிகரிப்பின் மூலமும் அந்த இக்கட்டு நிலை இப்போது நிறைவேறியுள்ளது.

தனியார் கடன் வழங்குநர்கள் இலங்கையின் வெளிப்புற கடன் பங்குகளில் கிட்டத்தட்ட 40 வீதத்தை வைத்திருக்கிறார்கள்(பெரும்பாலும்சர்வதேசஇறையாண்மை பத்திரங்கள் வடிவத்தில்). ஆனால் வட்டி வீதங்கள் அதிகமாக வழங்கப்படுவதால் 50 வீதத்துக்கும் அதிகமான வெளிப்புற கடன் கொடுப்பனவுகளை அவர்களே பெறுகின்றனர்.

இத்தகைய கடன் வழங்குநர்கள் தங்கள் அபாயங்களை ஈடுகட்ட இலங்கைக்குக் கடன் வழங்குவதற்கான பிரீமியத்தை வசூலித்தனர். இது அவர்களுக்கு பாரிய இலாபத்தை ஈட்டிக் கொடுத்ததுடன் ஏப்ரல் 2022 இல் இலங்கையின் முதல் தவணை தவறலுக்கு பங்களித்தது.

'இடர் பிரீமியம்' காரணமாக அதிக வருமானத்திலிருந்து பயனடைந்த கடன் வழங்குநர்கள் அந்த அபாயத்தின் விளைவுகளை எடுக்கத் தயாராக இருக்க வேண்டும். உண்மையில், சர்வதேச இறையாண்மை பத்திரங்கள் இப்போது இரண்டாம்நிலைசந்தையில்கணிசமாககுறைந்த விலையில் வர்த்தகம் செய்கின்றன.

இந்த சூழலில், சர்வதேச நாணய நிதியம் கோருகின்ற கடன் பேச்சுகளிலும் பரிஸ் கிளப்பிலும் இறையாண்மை கடனாளிகளுக்கு மேலாக தனியார் பத்திரதாரர்களுக்கு ஒரு மேலிடத்தை வழங்குவது இயற்கை நீதியின் அடிப்படைக் கொள்கைகளை மீறுகிறது.

மேலும் கடன் பேச்சு செயன்முறையின் வெளிப்படைத்தன்மை இல்லாததும் ஐ.எஸ்.பிகளை வைத்திருப்பவர்களின் பொறுப்புக்கூறல் இல்லாமலிருப்பதும் ஊழல் அரசியல்வாதிகளுக்கு கடன் வழங்குவதிலுள்ள இடர்மிகு நிலை (இப்போது 'மோசமான கடன்' என்று அங்கீகரிக்கப்படுவதற்கு வழிவகுக்கிறது) தற்போதைய கடன் நெருக்கடியை உருவாக்குவதில் ஒரு குறிப்பிடத்தக்க உறுப்பு என்ற கவலையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ஐ.எஸ்.பிகளை வைத்திருப்பவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவதோடு, ஐ.எஸ்.பிக்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதையும், அந்த நிதிகளின் பயன்பாட்டையும் வெளிப்படுத்துவதும் முக்கியம்.

இலங்கையில் கடன் பேச்சுகள் இப்போது ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளன. அனைத்து கடன் வழங்குநர்களும் (இருதரப்பு, பலதரப்பு மற்றும் தனியார்) மறுசீரமைப்பின் சுமையைப் பகிர்ந்து கொள்ளவேண்டும்என்பதுடன்அண்மைய காலப்பகுதியில் கூடுதல் நிதியுதவியை உறுதிப்படுத்த வேண்டும். எனினும், இலங்கை இதனை உறுதிப்படுத்த முடியாது; அதற்கு மிகப் பெரிய சர்வதேச ஆதரவு தேவைப்படுகிறது.

புவிசார் அரசியல் சூழ்ச்சிக்கு பதிலாக, இலங்கையின் கடன் வழங்குநர்கள் அனைவரும் தற்போதைய நெருக்கடியிலிருந்து ஒரு வழியை வழங்குவதற்குப் போதுமான அளவு கடன்கள் இரத்துச் செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

அதற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற பலதரப்பு அமைப்புகளின், குறிப்பாக சர்வதேச நிதி நிறுவனங்களின் பங்கும் முக்கியமானது. அவை இறையாண்மை நாடுகளுக்கு உதவுவதற்காக நிறுவப்பட்டன.

குறிப்பாக நிதிச் சந்தைகள் உதவாத சூழல்களில், நிதி நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் நிதி நெருக்கடிகளின் தாக்கத்தைத் தடுப்பதற்கும் அல்லது குறைப்பதற்கும், சமூக மற்றும் வளர்ச்சித் தேவைகளைப்பூர்த்திசெய்யத்தேவையான முக்கியமான முதலீடுகளுக்கான ஆதாரங்களை வழங்குவதற்கும் அவை நிறுவப்பட்டன.

அவை மிக அவசரமாக தேவைப்படும் நேரத்தில் சர்வதேச நிதி நிறுவனங்கள் தற்போது இந்தப் பொறுப்புகளுக்கு ஏற்ப செயற்படவில்லை. இலங்கையில் அவை தற்போதைய நெருக்கடிக்கு வழிவகுத்த மிகவும் திறந்த மூலதன கணக்குகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தளர்வு ஆகிய கொள்கைகளை ஊக்குவித்தன.

அவை நெருக்கடிக்கு பதிலளிப்பதில் மெத்தனப் பொக்கோடு இருந்து வந்துள்ளதுடன் பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்தாலும், மிகக் குறுகிய காலத்தில் ஒரு முதன்மை நிதி உபரிக்கு செல்வது போன்ற கடுமையான கொள்கை மற்றும் நிதி இணக்கங்களைக் கோருகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் சமீபத்திய வரவு – செலவுத் திட்டத்தில் இதன் தாக்கங்கள் ஏற்கனவே தெளிவாகத் தெரிகிறது. இது நம்பத்தகாத வருவாய் அனுமானங்களைக் கொண்டுள்ளதுடன் அவை பூர்த்தி செய்யப்பட வாய்ப்புகளில்லை. இதன் விளைவாக வரும் வருவாய் குறைபாடுகள் பின்னர் மேலும் 'அதிகரித்த செலவுக் குறைப்பு' மற்றும் அத்தியாவசிய பொதுச் செலவினங்களைக் குறைக்க வேண்டிய தேவைப்பாட்டை உருவாக்கும்.

மூலோபாயக்காணிகள், கடல்வளங்கள், எரிசக்தி, போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு மற்றும் பொது முயற்சியாண்மைகளின் பொதுச் சொத்துக்களை அகற்றுதல் மற்றும் தனியார்மயமாக்கல் ஆகியவற்றை இந்த வரவு – செலவுத் திட்டம் முன்மொழிகிறது.

இந்த கொள்கைகள் இலங்கையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு தீங்கு விளைவிக்கும், வறுமை மற்றும் சமத்துவமின்மையை அதிகரிக்கும், மேலும் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். மாறாக மேம்பட்ட சமூக பாதுகாப்பு மீதும் பரிமாற்ற விலை மற்றும் வர்த்தக மிகைப் பட்டியலிடல் மூலம் இடம்பெறும் மூலதனத்தின் சட்டவிரோத வெளியேற்றத்தைத் தடுத்தல் மற்றும் சூப்பர் பணக்காரர்களின் பணக்குவிப்பு, நுகர்வு மீது வரி விதித்தல் ஆகியவற்றின் மீதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

உலகம் (குறிப்பாக சர்வதேச நிதி அமைப்பு) இறையாண்மை கடன் நிவாரணம் மற்றும் நிலைபேறாண்மை பற்றிய அவசர தேவைப்பாடுகளைக் கையாள்வதற்கு பொருத்தமானதாக இருக்கின்றதா என்பதற்கான ஒரு முக்கியமான குறிகாட்டியை இலங்கையின் நிலைவரம் வழங்கும் என்பதோடு அது சர்வதேச கடன் பேச்சுகளில் நீதியின் ஒரு பண்பை உறுதி செய்யும். ஆகவே, ஏற்கனவே அதன் சட்ட பூர்வமான தன்மை மற்றும் அடிப்படை நம்பகத்தன்மை இல்லாததால் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள ஒரு பலதரப்பு அமைப்பின் மீதான எந்தவொரு நம்பிக்கையையும் (இலங்கை மக்களுக்கு மட்டுமல்ல) மீட்டெடுப்பது மிக முக்கியமானது.

## கல்முனை மாநகரில் மாபெரும் பொங்கல்!



அம்பாறை மாவட்டத்தின் பிரதான தைப்பொங்கல் திருவிழா – 2022 கல்முனை தமிழ் இளைஞர் சேனை அமைப்பின் ஏற்பாட்டில் கல்முனை பழைய பஸ் நிலையத்தில் இளைஞர் சேனை அமைப்பின் தலைவர் எம்.சங்கீத் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேச செயலக அனுசரனையுடன் கோலாகலமாக நடைபெற்றது.

நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பமான இந்நிகழ்வில் இலங்கையின் தேசியக் கொடி, தமிழ் இளைஞர் சேனை அமைப்பின் கொடி, நந்திக்கொடி என்பன அதிதிகளால் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன் போது அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ.டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொங்கல் பானையில் புத்தரிசி இட்டு பொங்கல் விழாவை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் வே . ஜெகதீசன் , கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே . அதிசயராஜ், கலந்து கொண்டதுடன் விசேட அதிதிகளாக கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எல்.புத்திக்க, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர் , வைத்தியர் புஷ்பலதா லோகநாதன் ,அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கே.ஜெயராஜ், கல்முனை வடக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.வசந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அதிதிகளை வரவேற்றல், கொடி ஏற்றல் , தேசிய கீதம் இசைத்தல் , சேனையின் கீதம் இசைத்தல், மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம், தமிழ்த் தாய் வாழ்த்து , ஆசியுரை,வரவேற்புரை, வரவேற்பு நடனம் ,தலைமையுரை, பொங்கல்பானை ஏற்றல், நடனம், விஷேட அதிதிகள் உரை, நடனம் ,அதிதிகள் உரை, நடனம் ,பிரதம அதிதி உரை , நன்றியுரை என்பன இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது.

மேலும்தமிழர்பாரம்பரிய கலாசாரத்தை பிரதிபலிக்கும் மங்கள வாத்தியங்கள் இசைக்கப்பட்டதுடன்கல்முனை உவெஸ்லி உயர்தர மாணவர்களின்நடனம் விழாவிற்கு அழகு சேர்த்திருந்தது.மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ. டக்ளஸ் அங்கு உரையாற்றும் போது, இந்து மக்கள் மாத்திரமல்லாது மாவட்டத் தின் அனைத்து மக்களும்



ஒன்றிணைந்து கொண்டாடும் விழாவாக தைப்பொங்கல் விழா காணப்படுகின்றது.

மதங்கள், இனங்கள் வேறாக இருந்தாலும் நாட்டை கட்டியெழுப்ப நாம் எல்லோரும் ஒரே மக்களாக செயற்பட வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் பிறந்து வளர்ந்த என்னை பிரதம அதிதியாக அழைத்து இப்படியான ஒரு கௌரவத்தை வழங்கிய இன்றைய நாளை என்னால் மறக்க முடியாது. இதனை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றிகள் என்றார். அத்துடன் அம்பாறை மாவட்டத்தின் அரசாங்க அதிபருக்கு தமிழ் இளைஞர்கள் பொன்னாடை போர்த்தி மாலைகள் அணி வித்து மகத்தான வரவேற்பு வழங்கினர். வருடா வருடம் கல்முனை பிரதான நகரம் தைப்பொங்கல் தினத்தன்று அலங் கரிக்கப்பட்டு தமிழர்களின் பாரம்பரிய கலாசார பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதுண்டு. மாட்டு வண்டிகள் ஊர்வலமாக சென்று தைப்பொங்கல் திரு விழா இளைஞர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றமை வழமையாகும் என்பதுடன் கடந்த ஆண்டும் இளைஞர் சேனை அமைப்பினரால் பொங்கல் விழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்

### விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்

புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக இந்த புதிய தேசிய பாதுகாப்புச் சட்டமூலம் கொண்டுவரப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டமூலத்தை அடுத்த வாரத்துக்குள் அமைச்சரவையில் முன்வைக்கும் நோக்கில் அமைச்சரவை செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.



மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரில்புள்ளே மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் டி இந்திர திஸ்ஸ ஆகியோரின் இணை தலைமையுடன் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவால் தேசிய பாதுகாப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.01.2023இல் வெளியிடப்பெற்றது.